தளம் கட்டமைப்பு

தளம்
THALAM

## தளத்தின்

# விருட்சம்

சீளை - 2024

துளை -03





தளத்தின்

# விருட்சம்

கீளை – 2024
துளை –03

## உள்ளடக்கம்


- தளம் - முன்னுரை ஆசிரியர் உரை
- மாணவர் பக்கம் - ஆக்கங்கள்
- தளமும் வெளி மாவட்ட பயிற்சி பட்டறையும்
- இளம் சாதனையாளர்
- பங்குனி மாதம் நடைபெற்ற நிகழ்வுகள்
- சித்திரை மாதத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்வுகள்
- முகமூடி
- இதழாசிரியர் குழாம் விபரம்

# முன்னுரை

“ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும் ” என்பதற்கிணங்க ஒப்புரவும் நம் தளத்தின் திருமலை வெளியீடுகளில் இரு திங்களை கடந்து வெற்றிகரமாக “தளை – 3” இல் அடிவைக்கிறது நம் “விருட்சம்”.

தளத்தின் “தளிர்” குழுவினருக்கு மேற்கொள்ளப்படும் செயலமர்வுகளும் இளையோரின் கைவண்ணத்தில் உருவான கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், ஓவியங்கள், கைத்தொலைபேசி புகைப்பட ஆக்கங்களும் தளத்தின் இளையோர் வெளிக்களங்க செயற்பாடுகளில் மேற்கொள்ளும் பயிற்சிப்பட்டறைகளின் அனுபவப்பகிர்வுகளும் உள்ளிட,
“சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்” அடிப்படையில் வாகைசூடுவோரின் அனுபவங்களை கூறும் “இளம் சாதனையாளர்” பகுதியுடன் துளிர்க்கிறது.

# ஆசிரியர் உரை

அன்பார்ந்த தோழர்களே...

தளம் அமையத்தின் ஒருங்கிணைப்பில் திருமலை இளைஞர்கள் கைவண்ணத்தில் கடந்த மாதம் வெளிவந்த விருட்சம் மாத இதழானது வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

இவ்விதழை திறம்பட வெளியிட உதவிய நண்பர்கள், வாசகர்கள் போன்ற அனைவருக்கும் எமது நன்றிகளை சமர்ப்பிப்பதோடு விருட்சத்தின் மாசி – பங்குனி மாத கிளையின் வரவேற்பு எம்மை அதிக உற்சாகத்துடன் பங்குனி – சித்திரை மாத இதழினை உங்கள் முன் கொணர பெரும் ஆவலாக உள்ளோம்.

அத்துடன் மாசி – பங்குனி மாதம் வெளிவந்த விருட்சம் மாத இதழ் திருமலையின் பல நூலகங்களில் வன்பிரதியாக கிடைக்கின்றது. வாசித்து பயன்பெறுங்கள்.

கடந்த மாத இதழின் விமர்சனங்களை கருத்தில் கொண்டும் இம்முறை இவ்விதழிலானது பல மாற்றங்களுடனும், புது குழுவுடனும் புதுப்பொலிவுடன் உங்கள் கைகளில் கிடைக்கும்.

இவ்விருட்சமானது இத்திருக்கோணமலை மண்ணில் மேலும் கிளை பரப்ப உங்கள் ஆதரவினை படைப்புகளாக எதிர்பார்க்கிறோம். இவ்விதழை பற்றிய கருத்துக்கள், விமர்சனங்கள் மற்றும் ஆக்கங்களை அனுப்பி வைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் – 0776243212

# "சில அவள்கள் "

ஒரு உயிரை பெற்றெடுக்க தன் உயிரை பணயம் வைத்து மரணம் வரை சென்று திரும்பும் அவள் !
பெற்றெடுத்த குழந்தைக்கு தன் ரத்தத்தையே உணவாக மாற்றி பரிமாறும் அவள் !
மகன்களின் தேசத்தில் முடிசூடா அரசியாக கொண்டாடப்படும் தாயான அவள்!

என்றோ ஓர் உயிரை உலகிற்கு கொண்டுவர மாதந்தோறும் உதிரத்தின் ஒரு பங்கை இழந்து பழகும் அவள்!
உயிர் போகும் வலி !!! வலியை கூட மெதுவாய் தான் சொல்ல வேண்டும் ... ரகசியம் !
மூன்று நாள் சொந்த வீட்டிலேயே அண்ணிய நாட்டு உளவாளி போல் உலவ வேண்டும்.

ஆண்கள் இல்லாத கடை தேடிப்போய் அங்கு ஒரு பஞ்சை பெரிய பத்திரிகை சுத்தி வாங்க வேண்டும்.
சமூகத்தின் பார்வையில் இது அசிங்கம் !!!
இயற்கையாய் நிகழும் ஒரு நிகழ்வின் மீது அருவறுப்பு - மனிதர்கள் நாம் தோன்ற காரணமாயிருந்த சுழற்சியின் மீது தீட்டு - ம் ஹ் ம் பெண் தெய்வங்களும் இங்கே கண்ணீர் வடிக்கின்றனர்.

சகோதரி !!!
சண்டையிடும் போது குட்டி பிசாசு அவள் - சங்கட பொழுதுகளில் தோள் கொடுக்கும் தோழி அவள்!
அம்மா அருகில் இல்லாத பொழுதுகளில் தாயாக மாறும் அதே அவள்!
ஆண்களின் எண்ண ஓட்டத்தில் தோழியா? தாயா? என வியந்து பார்க்கப்படும் தேவதையான சகோதரி அவள்!

தோழி !!!
இருள் சூழ்ந்த உலகில் ஊடுருவி ஒளிபரப்பும் ஒற்றை ஒளித்துகள் அவள்!
கண்ணாடி குடுவைக்குள் சிறைப்பட்டு எரியும் விளக்கை அணையாமல் காக்கும் உயிர் வாயு அவள்!
பெருபாலான ஆண்களுக்கு பெண்களின் உலகத்தையும் காதலையும் கற்றுதரும் அவள்!

காலங்கள் பல கடந்தும் குட்டி போட்ட மயிலிறகாய் அவர்களின் நெஞ்சுக்குள் பசுமையான நினைவுகளால் பத்திரப்படுத்தப்பட்ட தோழியான அவள்!

காதலி !!!
பார்த்த உடனே காதல் வயப்பட அளவெடுத்து படைக்கப்பட்ட அவள்!
காதல் செய்ய மறுத்து முகத்தில் ஆசிட் அடிக்கப்பட்ட அவள் !
காதலும் காதலின் நிமித்தமாய் காற்றில் கற்பூரமாய் காலத்தை கரைக்கும் அவள்!
காதல் கொண்டு காலக்கடலில் தானும் நீந்தி அவனையும் கைகோர்த்து கரை சேர்க்கும் அவள்!

வெளிப்படையாய் அனைவரிடமும் பேசி அடிக்கடி சிரிக்கும் அவள் !
அக்கதாப்பாத்திரத்தை ஆணாய் இருந்தால் விளையாட்டு பையன் என்பார்கள் .
இவளை 'விளையாட்டு பெண்' இல்லை இல்லை 'விலை மாது ' என்று சற்றும் யோசிக்காமல் அழைக்கப்படும் அவள்!

வீதியில் கடந்து செல்லும் ஆண்களால் அழகில்லை என கலாய்க்கப்படும் அவள்!
ஐந்து நிமிட பேருந்து காத்திருப்பில் அங்கம் அங்கமாய் வர்ணிக்கப்படும் அவள்!
ஐந்தோ ஐம்பதோ வயது வித்தியாசம் இன்றி மனித மிருகங்களால் வேட்டையாடப்படும் அவள்!

திருமணத்திற்கான குறைந்த பட்ச தகுதிக்காக உயர்தரம் படிக்கும் அவள்!
படித்து முடித்து விட்டு திருமணத்திற்கு பிறகு அடுப்பு ஊதாமல் எரிவாயுவில் இரவு பகலாக சமைப்பதும் கிரைண்டரில் மாவு அரைப்பதுமாக காலத்தை கடத்தும் நடுத்தரவர்க்கத்து மனைவியான அவள்!

தாடி இருந்தால் முத்தமிட மாட்டேன் என்று சொல்லி சென்ற பெண்கள் மத்தியில் தாடி விலக்கி முத்தமிடும் தந்தைக்கு பேரன்பிற்குரிய மகளான அவள்!

கட்டுப்பாடு என்ற பெயரில் சில தடைகள் - தினம் வாழும் வாழ்வில் ' நான் எங்கே ' என துரத்தும் கேள்வி? எப்போது முகம் மறைக்கும் முகமூடிகள் - கண்ணாடி பார்க்கும் போது மட்டுமே புலப்படும் சுயமுகம்.
நிழலை கூட நம்பாமல் ஆராயும் வீடுகள் - வாழ்க்கை பற்றிய அத்தனை கனவுகளையும் தூங்கி எழுந்தவுடன் தொலைத்து விட வேண்டும் என எண்ணும் சுற்றம் . - இத்தனை கடந்தும் அனுதினமும் போராடி படித்து உழைத்து எட்ட முடியாத சில உயரங்களை அடைந்து அண்ணாந்து பார்க்க வைத்த அவர்கள்!

மகளிர் தினம் மட்டும் கொண்டாடாமல் தினம் தினம் அவர்களை கொண்டாட முயற்சி செய்யுங்கள் .

## விவசாயம் காப்போம்

ஆஹா அழகுலகமே
அடர்ந்த பயிர் கதிரழகே
வானத்தின் நிறமழகே
நிழல் தரும் மரமழகே

பால்மணம் கொண்ட அழகு
தாயான பயிரழகே
நீர் பாய்ச்சி நிலம் விளைந்த
செங்கதிர் நிறத்தழகே

நீளமாக பயிர் வளர்ந்திடவே
நித்தம் உழைத்த விவசாயி
தோழணைத்து முத்தமிட
ஆசை மிகக் கூடுதிங்கே

பசியின்றி நான் இருக்க
பஞ்சமில்லா வாழ்விடைக்க
பூமியிலே உயிர்பிழைக்க
வைத்த விவசாயி வாழ்கவே!

யாரும் இங்கு துன்பமிழைத்தும்
வாழ்தல் சாத்தியமே
உழவனுக்கு கெடுதிழைத்தால்
வீழ்தல் சாத்தியமே

ம. ஜோதிகா
தம்பலகாமம்



## நவீனம்

ஆதி மனிதன் காணா ஆடம்பரங்களும்...
கற்காலம் அறிந்திடா கருவிகளும்...
மூதாதையர் வாழ்ந்திடா கட்டடங்களும்...
முன்னோர்கள் பார்த்திடா பயணங்களும்...
மலிவாகிவிட்ட நவீன உலகம்...

பயணத்தின் இலகிற்கு வாகனங்களும்...
வேலைகளின் விரைவிற்கு கருவிகளும்...
நோய்களின் சுகத்திற்கு மருந்துகளும்....
தொடர்புகளின் வசதிக்கு இணையங்களும்....
மலிவாகிவிட்ட நவீன உலகம்....

கடவுளிற்கு விடை தேடும் அறிவியல்களும்...
செய்வாயில் நீர் தேடும் விஞ்ஞானங்களும்...
மரணத்தை வெல்ல துடிக்கும் மருத்துவங்களும்...
இயற்கையையே மாற்ற நினைக்கும்
மனிதர்களும்.....
மலிவாகிவிட்ட நவீன உலகம்.....

மூலிகைகளின் இடம் மாத்திரைகளால் மறைந்து
போனதாலும்....
உடலசைவுகள் கருவிகளால் கரைந்து
போனதாலும்...
தொலைபேசிகளால் நேரங்கள் தொலைந்து
போனதாலும்...
நவீனங்கள் என்னவோ அனைத்திற்கும்
நன்மையேயில்லை...

கருவிகள் பல இருந்தும் ஓய்வில்லா
மனிதர்களும்...
மருத்துவங்கள் பல இருந்தும் மிகையான
நோய்களும்...
வாகனங்கள் பல இருந்தும் ஏராளமான
விபத்துக்களும்...
நவீனங்கள் என்னவோ அனைத்திற்கும்
நன்மையேயில்லை....

அடுக்கு கோபுரங்களால் தொலைந்து போன
காடுகளும்...
காடழிப்புக்களால் காணாமல் போன
உயிரிகளும்....
குப்பைகளால் நிறைந்து வரும் கடல்களும்...
வெப்பமதால் உருகிவரும் பனிமலைகளும்...
நவீனங்கள் என்னவோ அனைத்திற்கும்
நன்மையேயில்லை..

இயற்கையை ஆதரித்திடும் நவீனங்களும்...
எதிர்காலங்களை சிந்தித்திடும் நவீனங்களும்..
உலகினை காத்திடும் நவீனங்களும்....
நன்மையே நாளும் நமக்கு... அல்லாதவை...
அளித்திடுமே பொல்லாத அல்லல்தனை..

சி.ஜயந்தன்
மூதூர்

## யாரோ அவன்

கிடைத்துவிட்டால் போதும் என்று அவசர
அவசரமாய் ஏறி அமர்ந்தேன்
சனத்திரளின் நடுவே சட்டென்று வந்தமர்ந்தான்
என் அருகில்
என் கவனமோ டிக்கெட்டில், அவனுடையதும்
தான்
அப்போதுதான் கேட்டேன்
வன்மையன்றிய ஆண்மைக்கேயுரிய அக்காந்த
குரல்
என் செவிவழி தீண்டியதால்
விழி பார்க்கும் ஜன்னல் திரையும் களையற்று
போய்விட்டது
காத்திருந்தேன்
நேரமும் நகர்ந்தது அதனோடு பேருந்தும்
மெல்ல மெல்ல திரும்பினேன்
அங்கே ஏமாற்றம் அவன் உறங்கி விட்டிருந்தான்
நான் ஆசுவாசமாகவே அரை நாழி சென்றது
கூர்ந்து நோக்கினேன்
கேசக்கற்றைகள் காற்றில் கலைந்து களியாட்டம்
போட்டன
கூர் மூக்கும் குறுகிச் சிவந்த இதழ்களும்
அதனைத் தழுவும் அரும்பு மீசையும்
நேர் நாசியும் அதில் படரும் அடர் தாடியும்
வேல்விழிகளும் அதன் வரிவழி இமைகளும்
அங்கும் இங்கும் சரிந்தான் பேருந்து
அசௌகரியம் போலும்
சட்டென்று சரிந்து விட்டான் என் தோளில் பின்
வாகாக உறங்கினான் மழலை போலே
என் இதயம் தான் இயங்கவா என்று அடம்
பிடித்தது
சிறிது நேரத்தில் அவன் அரவம் கேட்டது
நான் விழி மூடினேன் உறங்குவது போல
அவன் தோள் சாய்ந்து விட்டேன்
என் உறக்கம் தொலைத்த அவனை
பழிவாங்குவதற்காக
ஒரு மணி நேரத்தில் விழித்தேன் ஏதும் நடவாதது
போல்
வெளி நோக்கி திரும்பி விட்டேன்
தொலைந்த பலூன் கிடைத்த பிள்ளை போலே
ஓர் உற்சாகம் நேரம் செல்ல அவன் கீழ்
இறங்கினான், சென்றுவிட்டான் தனிமை
குடியேறியது இருந்த போதும் அவன் இனிமை
இம்சைப்படுத்தியது

– வேல் திரவியம்
–

## அவளால் நான்

தினம் ஏங்கும் அவள் சண்டையும்
அதிலாகும் சிறு சிணுங்கலும்
முறைக்காமல் சிதைக்கின்ற
அவள் பார்வையும்
ஏனோ எனை கொன்று
தினம் புதைக்கின்றது

கொஞ்சுவதில் அவள் மகாராணி
எனை கெஞ்ச வைப்பதில்
அவள் அவா அளவில்லை
தெளிவென பேசுவாள்
சிறு தனமாய் சிறு விடயத்துக்காய்
தேம்பி தேம்பி அழுவாள்

கோவம் வரா கொலைகாரி அவள்
கொழுந்து கொய்ய முடியா
கூச்சமும் அவள்
எனை ஏக்கத்திலே அலைவிப்பாள்
அத்தேக்கத்தில் எனை மடிவிப்பாள்
அவள் என் கண்ணகியடி

ஜெ.கிருபா

## போதை எதற்கு?

போதை எதற்கு? – தோழா
பாதை இருக்கு
வாது எதற்கு? – தோழா
கீதை இருக்கு

புத்தியை மயக்கும் – போதைக்
கழிவுகள் வேண்டா
சத்தியை மல்கும் – அரும்
உத்தியை வேண்டு

தேன்வழியப் பேசி – போதைத்
தீயில் இறக்குவர்
களியாட்டம் காட்டி – ஈனச்
சுடுகாடு ஏற்றுவர்

பலியாகி நீயும் – அரக்கர்
வாய் நுழையாதே
புலியாகப் பாய்ந்து – தோழா
போதையை எரித்துவிடு

பற்பல வடிவில் – உன்னைப்
பற்றிடும் போதை
முற்றும் மறந்து – தோழா
ஆகிவிடு நீ மேதை.

தமிழ்க்கீரன்






FILA






































# தமிழ்

"கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி தமிழ்குடி" என்ற வீரம் பொருந்திய நம் தாய்மொழி 2500 ஆண்டுகளுக்கு மேலான தொன்மையையும் மாசற்ற பாரம்பரியத்தையும் கொண்டு விளங்குகிறது. பன்னிரு உயிரும் 18 மெய்யும் கொண்டு உருவாகிய 216 உயிர்மெய்களுடன் ஆயுதமும் உள்ளிட 247 எழுத்துக்களுடன் இனிமையாக எளிமையுடன் திகழ்கிறது.
"தமிழுக்கும் அமுதென்று பேர் அந்த தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" எனும் பாவேந்தரின் பாடல் தமிழின் அழகையும் சிறப்பையும், மக்கள் தமிழுக்கு வழங்கும் மதிப்பையும் இலகு நடையில் பறைசாற்றுகின்றது.

எண்ணற்றோரால் சங்கம் வைத்து தடத்தப்பட்ட நம் தமிழ் செந்தமிழ், பைந்தமிழ், அருந்தமிழ், நறுந்தமிழ், தீந்தமிழ், தண்டமிழ், முத்தமிழ் இன்றமிழ், மூவாத்தமிழ், கன்னித்தமிழ் என பல புனைப்பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகிறது. தமிழ் மட்டுமே எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்று ஐவகைக்கு இலக்கணம் வகுக்கிறது. ஆகையால்தான் தமிழ் ஐந்திலக்கணம் எனப்படுகிறது. வல், மெல், இடை என்று வகைப்பட்டு ஓரெழுத்திலே ஓராயிரம் அர்த்தத்தை உணர்த்தி ஐ, ஆல், ஒடு, ஓடு என வேற்றுமையாகி பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம், தற்சுடுக்கிளவிகளின் புணர்ச்சி வாழ்நிலைகளும் கற்கக்கற்க தெவிட்டாதவை. பல்லாயிரம் மொழிகள் பழக்கத்தில் இருந்த போதும் 'சொல்லில் உயர்வு தமிழ் சொல்லே, அதை தொழுது படித்திடடி பாப்பா' என்று மகாகவி தமிழின் முக்கியத்துவத்தை தன் பாடல் மூலம் பாலர்களுக்கும் விளங்கும் வகையில் அழகாக கூறுகிறார்.

தமிழின் சிறப்பை கூறுவதற்கு யுகங்கள் போதாது. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் அருணகிரிநாதர். இவரின் யமக முறையில் அமைந்த கந்தரந்தாதியின் 54 ஆவது பாடல் 'தகர' வரிசையில் அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும். முற்றிலும் 'த'எனும் எழுத்தின் வரிசையிலேயே அமைந்திருக்கும் பாடல் தமிழின் இலக்கணத்தை தெளிவாக எடுத்து கூறுகிறது.
"திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்து தித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாதத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்ததே" இத் 'தகர' வரிசை பாடல் தமிழின் விந்தை வேறெந்த மொழியிலும் இருப்பதற்கு வாய்ப்பில்லை என்பதை நிதர்சனமாக்குகிறது.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பரந்து விரிந்து உறுதியாக நிற்கும் நம் தமிழின் இனிமை எதற்கும் ஈடில்லை என்று பாரதி தான் தமிழ் மேல் கொண்ட காதலை கவிதை வடிவிலே கூறுகிறார்.

தொல்காப்பியம் முதல் திருமூலரின் திருமந்திரம், வள்ளுவரின் திருக்குறள் தொடங்கி புறநானூறு வரை பல எண்ணிலடங்கா படைப்புகள் தமிழில் இயற்றப்பட்டுள்ளமை தமிழின் தொன்மையையும் ஆட்சியையும் அறுதியிட்டுக் கூறுகிறது.
“தானே முழுதுணர்ந்து தண்தமிழின் வெண்குறலால்...” என்று திருக்குறள் தமிழில் அமைந்துள்ளதை நக்கீரர் எடுத்தியம்புகின்றார்.

அமுதமான நம் மொழியை உலகெங்கும் பரவிடச் செய்வாயாக என்று வலியுறுத்தும் மகாகவியே, “யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவனை போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை” என தமிழை புகழ்வது மட்டுமின்றி தமிழை போற்றி வளர்த்த புலவர்களையும் அழகிய தமிழ் உரைநடையிலேயே குறிப்பிடுவது அவரின் தமிழ் பற்றை பறைசாற்றுகின்றது.

“கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு” என்பது போல் நாம் தமிழ்ப் பற்றி அறிந்தவை, தெரிந்தவை விடுத்து அதன் விந்தைகள் பல திக்குகளிலும் வியாபித்திருக்கின்றன. எனினும், அவை நமக்கு புலப்படாது புதைந்தும், தேடுவாரற்றும் காணப்படுவது வருத்தத்திற்குரியதே. ஈரைந்து மாதங்கள் நம்மை பெற்றெடுப்பாள் அன்னை, தாய் போலே நம்மை தத்தெடுக்கும் நம் தாய்மொழி
தாய்மொழி – தமிழ்

“என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறு”.

ஆக்கம்: யாநி, யாழ்ப்பாணம்.



# மகளிர் தினம்

மார்ச் மாதம் 08 ஆம் திகதி உலகம் முழுவதும் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. பெண்கள் இல்லாமல் இந்த உலகமே இல்லை என்று தான் சொல்ல வேண்டும். அன்றைய காலத்தில் தான் பெண்கள் வீட்டிற்குள்ளேயே முடங்கி கிடந்தார்கள். ஆனால் அந்த நிலை தற்போது மாறி பெண்கள் அனைத்து துறையிலும் சாதித்து வருகின்றனர்.

ஆண்களுக்கு நிகராக பெண்களும் வாழ்கின்றார்கள் என்ற முற்போக்கு சிந்தனையின் விதையினை விதைத்தவர் மகாகவி பாரதியார். இந்த சமூகத்தின் சாபக்கேடான பெண்ணடிமைத்தனத்தை உடைத்தெறிய இந்த உலகத்தில் பிறந்த உன்னதமான மனிதனும் மகாகவி சுப்ரமணிய பாரதியாரே....

பெண்கள் இல்லாமல் இந்த உலகம் தனித்து இயங்க முடியாது என்பது 100வீதம் உண்மைதான். ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாள் தான் மகளிர் தினம்.
அன்றைய காலத்தில் பெண்கள் வீட்டை விட்டு வருவதற்கே யோசிப்பார்கள். அவர்களுக்கான கல்வி மறுக்கப்பட்டது. சுதந்திரம் பறிக்கப்பட்டது. இளம் வயதில் திருமணம் செய்து வைக்கப்பட்டது. கணவன் இறந்தால் உடன்கட்டை ஏறும்படி செய்யப்பட்டது. அந்த நிலை இப்போது முற்றிலும் மாறி வானில் பறக்கும் அளவிற்கு பெண்கள் வளர்ச்சி அடைந்துள்ளார்கள் என்பது மிகப்பெரிய விஷயம்.

பெண்ணடிமைத்தனம் எங்கு இருக்கின்றதோ அங்கு தான் பெண் சுதந்திரம் மற்றும் பெண்கள் எழுச்சி தேவைப்படுகிறது. உலக மகளிர் அமைப்புகள் ஒன்றுகூடி மகளிர் தினத்தை மார்ச் 08 என்று கட்டமைத்தனர். மகளிர் தினத்தை பெண்கள் மட்டும் கொண்டாடாமால் ஆண்களும் இணைந்து கொண்டாட வேண்டும். அப்போதுதான் அன்றைய நாள் முழுமை பெறும்.

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்ற நிலை அப்போது காலம் காலமாக இருந்து வந்தது. “கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு” என்ற பழமொழிக்கேற்ப இப்போதுள்ள அனைத்து பெண்களும் கல்வி கற்று சாதனை படைத்துள்ளார்கள். ஆண்கள் மட்டுமே அனைத்து துறையிலும் பணி புரிந்து வந்த நிலை மாறி பெண்களும் இப்போது விமானத்துறை, ஆசிரியர்ப்பணி, கப்பல் துறை, அலுவலக பணிகள், காவல் துறை போன்ற அனைத்து துறையிலும் பங்காற்றி வருகிறார்கள்.

எத்தனையோ பெண்கள் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டியிருந்தாலும் கூட இன்னும் இன்றய காலகட்டத்தில் பெண்களின் வாழ்க்கைத்தரம் முன்னேறி இருக்கின்றதா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. பெண்களே நாட்டினுடைய கண்கள்... பெண்களை எப்போதும் ஆண்களுக்கு நிகராகவே பார்த்தோம் என்றால் பெண்களுக்கு நிச்சயமாக எந்த பாதிப்பும் ஏற்படாது.

ர. அதிசயா



# விவசாயமும் தொழிநுட்ப வளர்ச்சியும்

விவசாயம் என்பது உலகில் மேன்மையான தொழில்களில் ஒன்றாகும். ஒரு நாட்டின் முதுகெலும்பு விவசாயமாகும். நாகரிகங்களுக்கு வழிவகுத்த சிறப்பான மானுடவியல் வளர்ச்சி வேளாண்மையாகும்.

“தாளாற்றி தந்தபொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு” என விவசாயத்தின் மகத்துவத்தை திருவள்ளுவர் கூறுகிறார். “உழுவோர் உழைத்தால்தான் உலகோர் பிழைப்பர்” என நம் முன்னோர்கள் கூறுவார்கள். விவசாயி சேற்றில் கால் வைத்தால்தான், நாம் சோற்றில் கைவைக்க முடியும் உணவு இல்லையென்றால் மனிதனால் உயிர்வாழ முடியாது.

தொன்மைக்கால விவசாயமானது இயற்கையானதாகவும் நேர்த்தியானதாகவும் காணப்பட்டது. உரிய பருவ காலத்தில் சரியான பயிர்களை தேர்ந்தெடுப்பதன் மூலம் நன்மை செய்யும் பூச்சிகளை முழுமையாக பயன்படுத்தினர். பெரும்பாலான வேளாண்மைக்கு மனித உழைப்பு மிகுதியாக இருந்தது, மற்றும் மாடுகளின் உழைப்பும் பயன்படுத்தப்பட்டது. பல்வேறு உயிரினங்கள் விவசாயத்திற்கு உதவி செய்கின்றன என்பதனை தொண்மைக்கால விவசாயிகள் நன்கு அறிந்திருந்தனர்.

இன்று நவீன தொழிநுட்பமானது விவசாய துறை உட்பட அனைத்து துறைகளிலும் தாக்கம் செலுத்தி வருகின்றது. இதன் விளைவாக பல புதிய பயிர்கள் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இலகுவாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடிகின்றது.

விவசாயத்தில் புதிய தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி மரபணு மாற்றப்பட்ட விதை, உரம், பூச்சி மருந்து, புதிய விவசாய உபகரணங்கள் போன்றவற்றை அறிமுகப்படுத்தி அதிக விளைச்சல்களை பெறுகின்றனர். இவற்றின் மூலம் லாபம் ஈட்டப்படுவதுடன் தொழிநுட்பம் மூலமாக அதிகபரப்பளவில் பயிர் செய்யவும் முடிகிறது. பயிர்களைப் பயிரிடவும் கிருமிகளிடமிருந்து பாதுகாக்கவும் தொழிநுட்பம் பங்களிப்பு செய்கிறது. தொழில்நுட்பத்தின் பலனை பல நாடுகள் அனுபவித்து வருகின்றன.

எனினும் விவசாயத்தில் பயன்படுத்தப்படுகின்ற நவீன கிருமிநாசினிகள் உணவை நஞ்சாக்குகின்றது. ஏராளமான நோய்கள் ஏற்படுவதற்கும் காரணமாக அமைகின்றன. தரமற்ற உரங்களின் பயன்பாட்டால் பயிர்கள் அழிவடைகின்றன. பொருளாதாரப் பின்னடைவைச் சந்திக்கும் விவசாய குடும்பங்கள் தங்கள் விளைநிலங்களை செல்வந்தர்களுக்கு விற்பனை செய்வதை காண முடிகின்றது. விளைநிலங்கள் விவசாயம் தவிர வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

இன்று பண்டைய விவசாயம் பெரிதும் அருகிப் போய்விட்டது. குறிப்பாக தொழிநுட்ப முன்னேற்றத்தினால் புதிய விவசாய உற்பத்திகள் கண்டுபிடிக்கப்பட்டதால் பண்டைய விவசாயம் மறைந்து வருகின்றது.

அன்றும் இன்றும் மனிதனை காப்பது விவசாயமாகும். காலங்கள் கடந்தாலும் நவீன கலாச்சாரம் வளர்ந்தாலும் விவசாயத்தை என்றும் பேணிக்காக்க வேண்டும். எனவே விவசாயத்தை போற்றுவோம். விவசாயிகளைத் தெய்வமாக மதிப்போம், எதிர்கால சந்ததியினருக்கும் விவசாயத்தின் பயன்களை கற்றுக்கொடுத்து வேளாண்மையைச் சிறப்பிப்போம்.

அலனியா, திருகோணமலை.

அவளை நான் முதன் முதலாக நூலகத்தில் கண்டேன். புத்தகத்தின் பக்கம் திருப்ப திருப்ப அவள் கண்மடல் சிமிட்ட சிமிட்ட அனைத்தையும் ரசித்துக்கொண்டே பெருமூச்சு விட்டேன். அந்த சத்தத்தில் அருகிருந்தவள் திரும்பிப் பார்த்தாள். நான் மெல்ல புன்னகைத்துக்கொண்டு அறிமுகமாகினேன். இருவரும் மெல்ல பேசிக்கொண்டோம். இதுதான் சந்தர்ப்பம் என அவளை பற்றி கேட்டேன். அருகிலிருந்தவளின் முகத்தில் வானிலை மாற்றம்.

(மெல்ல புன்னகைத்தபடி "எனக்கு பார்த்ததும் பிடித்தது, உங்கள் தோழியா?"என கேட்டேன். "ஆம்" என ஆரம்பித்து அவள் பற்றி கூறத் தொடங்கினாள். அவளையே மெல்ல அழைத்தாள். அவள் அருகில் வர வர எனக்குள் ஒரு நடுக்கம். அவள் தோழியோடு பேசிக்கொண்டிருக்கும் போது என்னை அறியாமல் அவள் கண்களை ரசித்துக்கொண்டிருந்தேன். திடீர் என அந்த கண்கள் எனைப் பார்த்ததும் பதற்றத்தில் திரும்பினேன் தலை குனிந்தபடியே. (கஷ்டப்பட்டு எச்சில் விழுங்கியபடி என் கண்கள் ஊசலாடிக்கொண்டிருந்தது)

அப்பொழுது என்னுடைய புது தோழி என்னை அறிமுகப்படுத்தினாள். மெல்ல நிமிர்ந்து அவளை பார்த்தேன். அவள் கைகளை தந்து அவளை அறிமுகம் செய்தாள். அவள் கைகளை தொடும் போதே எனக்குள் பட்டாம்பூச்சிகளின் சலசலப்பு. அதற்கு பிறகு அடிக்கடி அவளை பார்க்க நூலகம் அழைக்கும். நானும், என்னுடைய தோழியும் வருவோம். என்னை பார்த்து சிறு புன்முறுவல் செய்வாள். நானும் அதைப் பார்த்து வெட்கப்படுவதை என் தோழி கவனித்துக்கொண்டிருப்பாள். ஒரு நாள் நேரடியாக என்னிடம் கேட்டாள். நானும் எனக்குள் ஏற்படும் உணர்வுகளை கூறினேன். எனது தோழி எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்தாள்.

ஒரு நாள் அதே போலே இருவரும் அமர்ந்து இருந்தோம். அவளோடு வேறுயாரோ பேசிக்கொண்டிருப்பதை பார்த்தேன். லேசாக என் மனதிற்குள் ஒரு வலி. என் கைகளை பிடித்து என் நண்பி "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை" என்றாள். அவள் தான் என்னுடைய ஆறுதல். நானும் அவளை கவனிக்காது புத்தகத்தை பார்த்துக்கொண்டிருந்தேன். எதேர்ச்சையாக பார்க்கும் போது அவள் பார்துக்கொண்டிருப்பதை பார்த்தேன். நான் பார்த்ததும் திரும்பி விட்டாள். இருவரும் மாறி மாறி பார்த்துக்கொண்டே இருந்தோம். மனதிற்குள் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு எழுந்து அவளை நோக்கிச் சென்றேன், அவளருகில் சென்றேன். அவள் விழியும் என் விழிகளும் பார்த்து சிரித்துக்கொண்டன. மெல்ல இருவரும் பேச தொடங்கினோம். அன்று மாலை இருவரும் கபே சென்றோம்.



நாட்கள் கழிந்தன. ஆனால் இருவரும் காதலை கூறவில்லை. என் தோழியிடம் உதவி கேட்டேன். அவள் சில யோசனைகள் கூறினாள். அழகான மலைப்பகுதிக்கு நீண்ட தூரம் கார் பயணம் செய்தோம். அந்த மலைப்பகுதிக்கு ஏற்கனவே என் தோழியோடு சென்றிருக்கின்றேன். அங்கே இரவில் விண்மீன்கள் தூவப்பட்ட வானம் பார்க்கலாம். எனக்கு விண்மீன்கள் என்றால் அவ்வளவு பிடிக்கும். அதே இடத்திற்கு அழைத்துச்சென்றேன். இருவரும் நீண்ட நேரம் பேசிக்கொண்டே இருந்தோம். நட்சத்திரத்தின் ஒளியில் அவளுடைய அழகு முகத்தையும் அந்த கண்களையும் பார்த்துக்கொண்டே இருந்தேன். ஒரு நிமிடம் அந்த இடமே அமைதியாக இருந்தது. அவளுடைய கண்களை பார்த்து என்னுடைய காதலை சொன்னேன். அவள் கண்கள் சிமிட்டப்படாமல் ஒரு கணம் அப்படியே இருந்தது.

"என்ன பதில் கூறாமல் இருக்கிறாய்?" என்று கேட்டேன். அவள், "என்னுடைய வாழ்க்கையில் இப்படியொரு ப்ரோபோசல் வரும் என எதிர்பார்க்கவில்லை. எனக்கும் உன்னை ரொம்ப பிடிக்கும்" என அவளுடைய காதலை கூறினாள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம். அவளுடைய கைகளை மெல்லப்பிடித்தேன். "என் கண்களை பார்த்து மீண்டும் கூறுவாயா? ஏனென்றால் சிறு வயதிலிருந்தே சில காரணங்களால் யார் மீதும் அளவு கடந்த அன்பும், நம்பிக்கையும் வைத்திருக்கவில்லை. நான் அதனால் தான் உன்னிடம் கேட்கிறேன். நீ தான் இவையிரண்டையும் வரவைக்க உதவ வேண்டும்" என்றேன். அவளுக்கு என் மனநிலை புரிந்தது. மறுப்பின்றி என் கண்களை பார்த்துக் கூறினாள். நான் "மீண்டும்" என்றேன். மீண்டும் கூறினாள். திரும்பவும் "மீண்டும்" என்றேன். சலிப்பின்றி மீண்டும் கூறினாள். என் கண்களில் என்னை அறியாமலேயே நீர் வழிந்தது. முதல் முறையாக அவள் காதல் எனக்கு நம்பிக்கையை தந்தது. அவளை எந்தவொரு நிலைமையிலும் பிரியக்கூடாது எனும் முடிவெடுத்து அவளை கட்டித்தழுவினேன். அவள் முகம் மெல்ல சிவக்க வெட்கி தலைகுனிய என் கரங்களால் மெல்ல முகத்தை உயர்த்தி விழிகளை பார்த்தேன். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து முத்தம் மூலம் காதலை பரிமாறிக்கொள்ள கண்களை மூடி கொண்ட அந்த நொடி என் காதுகளை கிழிக்கும் அளவுக்கு "நூலகத்தில் இருந்து உறக்கமா?" என்ற சத்தம் கேட்டு ஒரு கணம் திகைத்து போய் திடுக்கிட்டு விழித்தேன். விழி திறந்து பார்த்தேன் அப்போது தான் தெரியும் அருகில் இருந்த தோழியின் மடியில் நான் உறங்கி கொண்டிருந்தேன். எல்லாம் கனவானதே என கவலை தான்.

சிறுகதை

ஆக்கம்: அபிமன்யு.



# கைத்தொலைபேசியின் புகைப்படம்





வர்சா





குகன்

தினசன்

# சித்திரமும் கைப்பழக்கம்



தேசா



தேசா



கோகிலன்

# தளமும், வெளிமாவட்ட பயிற்சிப்பட்டறையும்

அனுபவப் பகிர்வு – நிதர்சனா ஞானசேகரன்

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஊடகவியலாளர்களை இணைத்து இலங்கையில் மத அல்லது நம்பிக்கை சுதந்திரம் பலப்படுத்தல் தொனிப்பொருளில் மட்டுவில் இரு தினங்கள் இடம்பெற்ற பயிற்சி திட்டத்தில் நானும் பங்கு கொண்டிருந்தேன். தெரிவு செய்யப்பட்ட பத்திரிகையாளர்களைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட இத்திட்டத்தில் திருகோணமலை பிரதிநிதிகளாக நம் “தளத்தினால்” மாதாந்தம் வெளியிடப்படும் “விருட்சம்” இதழின் சார்பில் நானும் மின்னிதழ் உப ஆசிரியரும் பங்கு கொண்டிருந்தோம்.

*௨௩.௦௩.௨௦௨௪* சனிக்கிழமையன்று காலை *௦௮.௦௦* மணியளவில் பாசிக்குடாவில் உள்ள பிரீஸ் விடுதியை சென்றடைந்தோம். இயற்கையை ரசிக்கும் விதத்தில் கட்டமைந்த விடுதியில் எங்களுக்கான அறை ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

வளவாளர் சட்டத்தரணி கு. ஐங்கரன் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் குழுக்களாகி செய்திகளின் அறிக்கை படுத்தலின் குறைபாடுகள் குறித்தும் கலந்துரையாடியதை தொடர்ந்து மதிய இடைவேளை கடந்த பின் மக்களின் பல தேவைகள் அவை உள்ளடங்கும் சட்டங்களுக்கு கீழ் நிரல் படுத்தப்பட்டன. இதனடிப்படையில் நான் மக்களுக்கு காணப்படும் தேவைகள் மற்றும் உரிமைகள் குறித்து பல விடயங்களை அறிந்து கொண்டேன். அனைவரும் இணைந்து மகிழ்ச்சியாக குழு புகைப்படம் எடுத்ததை தொடர்ந்து, இரவு தேவைகளை பூர்த்தி செய்து பொழுதுபோக்கு எனும் ரீதியில் பாடல்கள் பாடி நேரத்தை இனிமையாக செலவழித்தோம்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை ஊடகவியலாளர்களுடன் இனிமையாக விடிந்தது. சிறு விளையாட்டு மூலம் முதல் நாள் தொடங்கியது,தெரிந்து கொள்ளப்பட்ட விடயங்கள் அனைவராலும் பகிரப்பட்டன. முன்தினம் மேற்கொண்ட சொற்சமரினடிப்படையில் பலர் தத்துவங்களையும் வழங்கியிருந்தனர். தொடர்ந்து மத மற்றும் நம்பிக்கை சுதந்திரம் குறித்து இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசியலமைப்பு உறுப்புரை, சட்டம், கட்டளைச்சட்டம், பிரிவு, உபபிரிவு சட்டங்கள் குறித்து அலசியதோடு பல விடயங்களை பட்டைதீட்டினோம்.

சுவாரசியமாக அமைந்த இப் பயிற்சி திட்டம் முடிவடைந்த பின் எங்களை பாதுகாப்புடன் வழி அனுப்பி வைத்தனர் சக ஊடகவியலாளர்கள். இரு தினங்கள் நடைபெற்ற இவ்வமர்வில் நான் பற்பல புதிய விடயங்களை அறிந்ததுடன் ஆரோக்கியமான ஒரு அனுபவத்தையும் பெற்றுக் கொண்டேன்.




அனுபவப் பகிர்வு – பிரதீசன்

காலை *௪.௪௫* மணியளவில் பயணம் ஆரம்பித்தது. முதலில் நான் சென்று பார்வையிட்டது வவுனியாவிலுள்ள ‘கண்ணாட்டி‘ எனும் பிரதேசத்திலுள்ள இயற்கை பண்ணை ஒன்றை. வழக்கமாக ஒரு பயிர் செய்யும் பிரதேசம் என்றால் பாத்தியமைத்து, புற்கள் அகற்றி காணப்படும். ஆனால், அப்பிரதேசம் காடு போல் காணப்பட்டது. அங்கே நான் பார்த்த வட்டக்கொட்டில் மண்ணினால் அமைக்கபட்டது. அத்துடன் கூரை ஓலையாலும் நிலம் சாணத்தினாலும் பூசப்பட்டு அமைதியான இடமாக காணப்பட்டது. அவர்கள் அங்கே இயற்கையோடு சேர்ந்து இணைந்து வாழ்வதுதான் அவர்களின் நோக்கமாக இருந்தது. அவர்களின் பயிர் செய்யும் முறைகளும் ஆச்சரியமூட்டும் விதமாகவிருந்தது.



பின் வளவாளரின் வீட்டை பார்வையிட்டோம். வீட்டில் என்ன பார்ப்பதற்கிருக்கும் என்று நினைத்து சென்றேன். அவரின் வீடு இயற்கை சார்ந்து கட்டப்பட்டிருந்தது. கூரை ஓடுகளால் வேயப்பட்டு, நிலம் சாணத்தால் மெழுகப்பட்டுமிருந்தது. அவர்களுடைய வாழ்க்கை முறையை கேட்கும் பொழுது உண்மையிலேயே ஆச்சரியமாக இருந்தது. மாடு, ஆடு, நாய்கள் என பல செல்லப்பிராணிகள் அடங்கிய அவர்களுடைய குடும்பத்தின் எண்ணிக்கை அதிகம் . அத்துடன், வளவாளர் வீடு கட்டும்போது வெட்டிய ஒரு பனை மரத்துக்கு மூன்று பனைமரம் என்ற வீதத்தில் மரம் வளர்ப்பை மேற்கொள்வது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

அதற்குப் பின்பு சீட் நிறுவனத்தை பார்வையிட்டோம். அவர்களின் செயற்பாடுகளை கேட்கும் போது வியப்பூட்டும் விதமாக இருந்தது. ஏனென்றால், அவர்கள் ஆரம்பிக்கும்போது ஒரு சின்ன குடிலில் ஆரம்பித்தது இப்போது இவ்வளவு பெரிய நிறுவனமாக வளர்ந்துள்ளது. நான் பார்த்த அனைத்திலும் நான் பெரிதும் மதிப்பு மிக்கதாக நினைப்பது எதுவென்றால் வேறுபட்ட சிந்தனைகளுடன் கூடிய பல மனிதர்களை சந்தித்து அவர்களின் அனுபவத்தை கேட்டதுதான்.

# இளம் சாதனையாளர்




அனைவருக்கும் வணக்கம்

எனது பெயர் ஜெயக்குமார் சனுஜன். நான் திருகோணமலை மாவட்டத்தில் சாம்பல்தீவு எனும் பழமையான மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊரில் வசிக்கின்றேன். எனக்கு தமிழ் மீது அலாதிப் பிரியம் நான் சிறுவயதில் இருந்து கவிதை எழுதிவந்தேன். ஆனால் யாரிடம் சொல்லவில்லை காரணம் தமது என்று உரிமை கொள்வார்கள் என்று பயம் இருப்பினும், எனது திறமையை வெளிக்கொணர்ந்தது எனது பாடசாலை தமிழ் சந்திரகலா ஆசிரியரும் எனது வகுப்பாசிரியர் திருமதி அறிவழகன் ஆசிரியரும் தான்.

அதன் பிறகு ஒரு சில போட்டிகளில் பங்குகொண்டேன் .அதில் வெற்றியையும், பாராட்டையும் பெற்றுக் கொண்டேன். பின்னர் பாடசாலையில் எனது வகுப்பாசிரியர் திருமதி அறிவழகன் மிகவும் உதவியாக இருந்தார். எனது இந்த ஒரு இசைப்பயனத்திற்கும் இவரும் காரணமாக இருந்தார். அவரோடு இன்னும் பல ஆசிரியைகள் எனக்கு உந்துசக்தியாக இருந்தனர்

எனக்கு ஒரு ஆசை இருந்தது. எவ்வாறாயினும் பாடல் ஒன்று வெளியிட வேண்டும் என்று அதனை எனது அண்ணனான தன்ராஜ் அவர்களிடம் கூற அவரும் சில வழிகளில் உதவி புரிந்துள்ளார். எனது உயர்தர படிப்பு முடிந்தவுடன் ஆரம்பிக்கலாம் என்று இருந்தேன். அதனிடையில் எனக்கு தெரிந்த ஓரிரு நண்பர்களிடம் பாடல் செய்வதற்கு உரையாடினேன் அவர்கள் வரியை பார்த்துவிட்டு ஒன்றும் பதிலளிக்காமல் இருந்துவிட்டனர். இருந்தாலும் திருமலையில் உள்ள சொல்லிசைக்கலைஞர் ரகு பிரணவன் அண்ணாவிடம் தொடர்பு கொண்டு பாடல் செயவதற்கு திட்டம் வகுத்திருந்தேன்.

அதனிடையில் எனது ஊரில் பிறந்து ஒல்லாந்து நாடு சென்று திரும்பி இருந்தார். நாகேந்திரம் கையிலைநாதன் அவர் ஒரு புகழ் பெற்ற பாடகர் IBC ஆல் வைக்கப்பட்ட ஒரு பாடகர் போட்டியில் சிறந்த குரலிற்கான விருதைப் பெற்றார். அதனால் அவருடன் இணைந்து பணியாற்ற எனக்கு மிகவும் விருப்பமாய் இருந்தது அது மட்டுமல்லாமல் பெருமையும் கூட அதனால் அவரிடம் சென்று இவ்வாறு நான் பாடல் ஒன்று எழதியுள்ளேன். எனக்கூறி வரிகளை அவரிடம் காட்டினேன் .

இதே வேறொருவராக இருந்திருப்பின் வரிகளைக் பார்க்காது என்னை ஏதாவது காரணம் சொல்லி தட்டியிருப்பார்கள் ஆனால் இவர் அவ்வாறு செய்யவில்லை மாறாக நன்று செயவோம் என்று கூறினா ஆகையால் அனைவரும் முயற்சி செய்யுங்கள்.



கம்பனின் வழிவந்த கவிஞன் நான்
அகத்தியன் வழிவந்த
தமிழன் நான்
இராவணன் வழிவந்த
ஈழத்தின் இளவல் நான்
உலகமே வியக்கும் படி உயர முயன்றிடும்
முயற்சியாளன் நான்

அதன் பிறகு அவர் தமது உறவுகளுடன் யாழ்ப்பாணம் சென்றிருந்த வேளை இசையமைப்பாளர்களிடம் கதைத்து பாடல் வெளியிடுவதற்கான எல்லா செலவையும் தயாரிப்பாளர் என்ற ரீதியில் செய்தார். வரிகளை அவரிடம் கொடுக்கும் போது என்னையே பாடச்சொன்னார். ஆனால் எனக்கு அதில் விருப்பம் இல்லை காரணம் அவர் சிறந்த பாடகர் அத்துடன் பக்திப் பாடல்கள் அவரின் குரலுக்கு மிகப் பொருத்தமாக இருக்கும் என்று கூறினேன். அதை அவர் ஏற்றுக் கொண்டு பாடலும் பாடி முடித்து இரவு ஒரு ௰.00 மணியளவில் எனக்கு புலனம் மூலம் அனுப்பினார். அவர் பாடலை அனுப்பி விட்டு ஒரு சுவாரஸ்யமான விடயம் ஒன்றைக் கூறினார்.



என்னவெனில் இசையமைப்பாளர் எந்தக் கவிஞர் பாடலை எழுதியது என வினவியதாகவும்அவர் இல்லை ௨௦ வயசுப் பொடியன்தான் எழுதியது எனக் கூறியதும் அவர் ஆச்சரியம் அடைந்தார் எனவும் அதன் பிறகு எனது தொலைபேசி எண்ணை வாங்கி தொடர்பு கொண்டுவாழ்த்துக்கள் கூறி விட்டு வரும் காலத்தில் எனக்கு வாய்ப்புக்கள் தருவதாகவும் கூறினார்.

எனக்கு மிகவும் பிடித்துப் போனது முதலில் எனது அம்மாவிடம் காட்டினேன் அம்மா அழுது என்னை அரவணைத்து முத்தமிட்டார். அவர் அதற்கு சொன்ன விடயம் என்னவென்றால்எனக்கு கிரிக்கெட்டராக வேண்டும் என்று கனவு அது வேணாம் இவ்வாறு பாடல் வெளியீடு செய் என்று கூறினார். பின்னர் உறவுகளுக்கு அனுப்பினேன் அதில் ஒரு பின்னூட்டல் கிடைத்தது.

ஒரு அக்கா தொலைபேசியில் அழைப்பு விடுத்து தம்பி உங்கள் வரிகள் மிகவும் நன்றாக இருக்கிறது. மனக்கவலைகள் எல்லாம் போக்கும் வகையில் எழுதி இருக்கிறீர்கள் என்று கூறினார். பின்னர் தயாரிப்பாளர் மீண்டும் வெளிநாடு செல்வதற்கு இருப்பதால் உடனடியாக பாட்டை வெளியீடு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினேன். முதலில் poster design செய்வதற்கு இளமுருகநாதன் ஹேசிகனிடம் கேட்டேன்.

அடுத்த நாள் தனக்கு பரீட்சைகள் இருந்தும் எனக்காக அந்த உதவியைச் செய்தார். அதுமட்டுமல்லாமல் பாட்டு வெளியீட்டை தளம் காரியாலயத்தில் வெளியீடு செய்யுமாறும் கூறினார். பின்னர் தளத்தின் உரிமையாளர் ஹயக்ரீவன் அண்ணாவிடம் கதைத்து பாடல் வெளியிடுவதற்கான செயற்பாட்டை செய்தோம். பின்னர் பாடல் வெளியீடு செய்தோம்.

அதில் எனது நண்பர்கள் மற்றும் அம்மா உறவினர்கள் கோயில் நிர்வாகத்தினர். அனைவரும் பங்கு கொண்டார்கள்.அடுத்ததாக ஒரு பாடல் செய்வதற்கு தயார்படுத்துகிறேன். அது ஒரு காதல் தோல்வி பாடலாக இருக்கும் . அதற்கும் உங்கள் ஆதரவு கோரி நிற்கின்றேன் அதனைத் தொடர்ந்து ஒரு கவிதைப் புத்தகம் வெளியீடு செய்வதற்கும் தாயார் நிலையில் இருக்கின்றேன்.

எல்லோருக்கும் ஒரு தனித்துவமான திறமை இருக்கும் அதை வெளிக்கொண்டு வருவது உங்கள் முயற்சியில் உள்ளது.



# பங்குனி மாதத்தின் நினைவுகள்

### மென்சாதனங்களை பயனுள்ள முறையில் பயன்படுத்தல் – கருத்தமர்வு

திகதி : ௦௧.௦௩.௨௦௨௪
நேரம் : மாலை ௦௨.௦௦ முதல் ௦௫.௦௦ மணி வரை

நடைபெற்று முடிந்த அமர்வுகளின் தொடராக தளிர் – ௧ குழுமத்தினருக்கு உள்ளீட்டு, வெளியீட்டு சாதனங்களின் வகைகள் மற்றும் செலயாக்க அலகின் செயற்பாடு, அவற்றை வினைத்திறனாக உபயோகிக்கும் முறைகள் குறித்து விளங்கப்படுத்தப்பட்டதோடு தற்கால தேவை நிமித்தம் உருவாகியிருக்கும் புதிய சாதனங்கள் பற்றியும் கூறப்பட்டது.

### இலக்குகளை கட்டியெழுப்புதல் – கருத்தமர்வு

திகதி: ௦௨.௦௩.௨௦௨௪
நேரம்: காலை ௧௦.௩௦ முதல் மதியம் ௦௧.௦௦ மணி வரை

இலக்கு எனும் எண்ணக்கருவின் அடிப்படைகள், இலக்கை கட்டியெழுப்புதலின் நோக்கம், அதை நிறைவேற்றக்கூடிய வழிமுறைகள், அவ்வேளையில் எதிர்நோக்கும் சவால்கள் பற்றி தளிர் – ௨ குழுமத்தினருக்கு எடுத்துரைக்கப்பட்டதுடன் நிகழ்நிலையில் இலக்குகளை அடைதல் குறித்தான அறிமுகமும் வழங்கப்பட்டது.

### தளிர் – ௨ அறிமுகம்

திகதி: ௦௧.௦௩.௨௦௨௪
நேரம்: மாலை ௦௩.௦௦ முதல் ௦௫.௦௦ மணி வரை

பல இளையோரின் வேண்டுகோளின் அடிப்படையில், ‘தளிர் – குழுமம் ௨‘ உத்தியோபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. ‘தளிர்‘ செயற்த்திட்டம் தொடர்பான அறிமுகம், தனித்துவம் தொடர்பான புரிதல், சமூக ரீதியாக கட்டமைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான தெளிவூட்டல்களுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் ஆங்கிலம், சிங்களம், அடிப்படை தொழில்நுட்ப அறிவுகள், வாழ்வியல் திறன் விருத்திகள், அனுபவ பகிர்வுகள் போன்ற செயற்பாடுகளுட்பட பல்வேறுபட்ட விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

### வரைகலை வடிவமைப்பு மற்றும் தொகுப்பாக்கம் – கருத்தமர்வு

திகதி : ௦௨.௦௩.௨௦௨௪
நேரம் : மாலை ௦௨.௦௦ முதல் ௦௩.௩௦ மணி வரை

தளிர் – ௧ இளையோருக்கு வரைக்கலையின் முக்கியத்துவம், தேவைகள் மற்றும் பயன்பாடுகளுடன் வரைகலை தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் குறித்தான விரிவான விளக்கங்களுடன் செயற்பாட்டு ரீதியான பயிற்சிகளும் வழங்கப்பட்டு அமர்வு நிறைவடைந்தது.

# பங்குனி மாதத்தின் நினைவுகள்

### விருட்சம் – கிளை – ௨௦௨௪ – தளை – ௨ – வெளியீடு

திகதி: ௦௨.௦௩.௨௦௨௪
நேரம்: மாலை ௦௩.௩௦ முதல் ௦௬.௦௦ மணி வரை

‘விருட்சம்’ சஞ்சிகையின் இரண்டாவது இதழ் மாலை ௩.௪௫ மணியளவில் தளம் அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. மின்னிதழாக ஆரம்பித்த இதழ் இம்முறை ௨௦ வன்பிரதிகளாகவும் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### கருத்துருவாக்கம் தொடர்பான கருத்தமர்வு

திகதி: ௦௩.௦௩.௨௦௨௪
நேரம்: காலை ௰.௦௦ முதல் மதியம் ௦௧.௦௦ மணி வரை

கருத்துருவாக்கத்தின் அடிப்படை உட்பட கருத்துக்களின் தன்மை மற்றும் தனித்துவம் குறித்தும் நேர விரயத்தின் அவசியம் குறித்தும் மதியழகன் அவர்களால் இளையோருக்கு தெளிவுபடுத்தப்பட்டது. தொடர்ந்து ஆக்கப்பூர்வமான தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு இளையோரால் ஆரோக்கியமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு அமர்வானது நிறைவடைந்தது.

### சந்தைப்படுத்தல் தொடர்பான கருத்து – கருத்தமர்வு

திகதி: ௦௪.௦௩.௨௦௨௪
நேரம்: மாலை ௦௩.௩௦ முதல் ௦௫.௦௦ மணி வரை

சுய சந்தைப்படுத்தலை தொடர்ந்து தளிர் – ௧ குழுமத்தினருக்கு சந்தைப்படுத்தலில் உள்ள நுணுக்கங்கள், சாதக பாதகங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன் தற்கால பொருளாதாரத்தில் சந்தைப்படுத்தலின் தாக்கம் பற்றி தெளிவுபடுத்தப்பட்டது.

### நிகழ்நிலை கற்றலுக்கான தளங்கள் – கருத்தமர்வு

திகதி: ௦௫.௦௩.௨௦௨௪
நேரம்: காலை ௦௯.௦௦ முதல் ௰.௩௦ மணி வரை

சர்வதேச பல்கலைக்கழகங்களின் சான்றிதழ் பெறக்கூடிய மற்றும் குறுகிய காலத்தில் மேற்கொள்ளக்கூடிய நிகழ்நிலை கற்கைநெறிகள் பற்றிய விளக்கங்களுடன் தளிர் – ௨ குழுமத்தினருக்கான உகந்த கற்கைநெறி தெரியப்பட்டு கற்றல் முறைகள் தெளிவுபடுத்தப்பட்டது.

# பங்குனி மாதத்தின் நினைவுகள்

## சுயதொழில் முயற்சியாண்மை கருத்தமர்வு

திகதி: 05.03.2024
நேரம்: காலை 10.30 முதல் மதியம் 12.30 மணி வரை

தளிர் குழுமத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான சுயதொழில் முயற்சியாண்மை தொடர்பாக முயற்சியாண்மையில் ஆர்வமும், ஊக்கமும் உடைய மதிவதனன் அவர்கள் வளவாளராக கலந்து கொண்டு தனது கருத்துரைகளை வழங்கியிருந்தார். சுயதொழில் தொடர்பான அறிவு மற்றும் வழிகாட்டலை வழங்கி இளையோரின் மனதில் முயற்சியாண்மை தொடர்பான ஆர்வத்தை விதைத்தார்.

## 'லிங்க்டின்' சமூகவலைத்தளம் பற்றிய கருத்தமர்வு

திகதி: 12.03.2024
நேரம்: காலை 09.15 முதல் 11.00 மணி வரை

தற்காலத்தில் அனைவரிடத்திலும் ஆதிக்கம் செலுத்தும் சமூகவலைத்தளங்களில் 'லிங்க்டின்' சமூகவலைத்தளம் பற்றி வளவாளர் அருண் அவர்களால் தளிர் இரண்டாம் குழுவினருக்கு விளக்கவமர்வு இடம்பெற்றது. சமூகவலைத்தளம் பற்றிய அடிப்படையுடன் லிங்க்டினில் கணக்கு உருவாக்கம், இக்கணக்கினால் அடையும் நன்மை, தொழில் வாய்ப்புகளை பெற்றுதல் போன்றவற்றுடன் செயலியின் உபயோகத்தால் ஏற்படும் விளைவுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

## வலையொளி மற்றும் காணொளி உள்ளடக்கம் தொடர்பான பயிற்சிப்பட்டறை

திகதி: 07.03.2024
நேரம் : காலை 10.00 முதல் மதியம் 01.00 மணி வரை

தளிர் குழுமத்தினரின் திறனை விருத்தி செய்யும் பொருட்டு செந்தூரன் மற்றும் வசந்தன் ஆகிய வலையொளி பயனாளர்களை வளவாளர்களாகக் கொண்டு விளக்க கருத்தமர்வு நடாத்தப்பட்டது. காணொளி ஒன்றினை சமூகவலைத் தளங்களில் பதிவிடும்போது அக்காணொளி தெரிவின் கருத்து, பதிவிடலின் வேறுபாடுகள்,பிரச்சினைகள் பற்றி தெளிவான விளக்கம் வழங்கப்பட்டதுடன் வலையொளி மூலம் எவ்வாறு வருமானம் பெறலாம் என்ற விளக்கமும் அளிக்கப்பட்டது. இறுதியில் வளவாளர்களின் அனுபவங்கள் பகிரப்பட்டு, இளையோரின் சந்தேகங்களும் தீர்க்கப்பட்டது.

## பகுதி நேர வருமானமீட்டல் கருத்தமர்வு

திகதி: 09.03.2024
நேரம்: மதியம் 02.00 முதல் மாலை 03.30 மணி வரை

பகுதி நேரங்களில் உழைத்தல் தொடர்பாக தளிர் - 1 குழுமத்தினருக்கு பிரனீத் அவ்ரகளால் மேற்கொள்ளப்பட்ட அமர்வில் இணையதள வியாபாரம் பற்றிய கூறப்பட்டதுடன் வருமானமீட்டக்கூடிய வழிகளில் 'பைவர்' எனும் இணையதள வியாபார பக்கம் பற்றி விளங்கப்படுத்தப்பட்டது. தொடர்ந்து இணைப்பு சந்தைப்படுத்தல், டிஜிட்டல் வியாபாரம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

# பங்குனி மாதத்தின் நினைவுகள்

## அறிவாய்வியல் – நிகழ்நிலை அமர்வு – 06

திகதி: 13.03.2024
நேரம்: மாலை 08.30 முதல் 09.30 மணி வரை

போட்டிப்பரீட்சைகளில் எதிர்பார்க்கப்படும் வினாக்கள் தொடர்பாக நிகழ்நிலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அமர்வுகளில் 'யுனிவோடெக்' போட்டி பரீட்சைக்கு தயார்படுத்தும் நோக்கில் தோவிஷாந் அவர்களால் கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் இளையோர் தங்களது பரீட்சை தொடர்பான சந்தேகங்களையும், விளக்கமின்மையையும் தெளிவுபடுத்திக்கொண்டனர்.

## ஊடகவியல் – அனுபவப்பகிர்வுடனான அமர்வு

திகதி: 15.03.2024
நேரம்: மாலை 03.30 முதல் 05.30 மணி வரை

இளையோரின் மத்தியில் ஊடகவியல் தொடர்பான ஆர்வத்தை கட்டியெழுப்பும் நோக்கில் ஊடக துறையில் அனுபவமுள்ளோர் வளவாளர்களாக இணைந்திருந்தனர். செய்தி உருவாக்கத்தில் கவனிக்க வேண்டியவை மற்றும் செய்தி பிரசுரிப்பில் ஒப்புநோக்கலின் வகிபாகம் என்பவை பற்றி தெளிவாக விளக்கிதுடன் வளவாளர்கள் தங்கள் சொந்த அனுபவங்களையும், நிருபர்கள் பற்றிய அடிப்படை அம்சங்களையும் கூறினர். தொடர்ந்து இளையோரால் ஊடகவியல் ரீதியில் தொடுக்கப்பட்ட வினாக்களும் தெளிவுபடுத்தப்பட்டன.

## திண்ணை வெளிக்கள கலந்துரையாடல்

திகதி: 02.03.2024இ 09.03.2024
நேரம்: மாலை 05.00 முதல் 06.00 மணி வரை

இளையோரின் அரசியல் தொடர்பான ஆளுமையை விருத்தி செய்யும் பொருட்டும் அரசியல் கருத்தியல்களையும் கொண்டு சேர்க்கும் நோக்குடன் ஒழுங்கமைக்கப்படும் இவ்வமர்வுகளின் தொடர்ச்சியாக இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு நிலவரம் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் தற்கால நாட்டுநடப்பு பற்றி அலசப்பட்டது.

## 'Canva'எனும் செயலி - பயிற்சிப்பட்டறை

தளிர் – 2 திகதி: 13.03.2024
நேரம்: மாலை 03.30 முதல் 05.00 மணி வரை
தளிர் – 1 திகதி: 25.03.2024
நேரம்: மாலை 03.30 முதல் 05.00 மணி வரை

இளையோருக்கு 'கன்வா' எனும் தலைப்பில் விளக்கவமர்வு வளவாளர் பிராங்க்ளின் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. காணொளிகள், புகைப்படங்களை வார்ப்புருக்களை பயன்படுத்தி வடிவமைத்தல், தொகுத்தல், காட்சிப்படுத்தல் உட்பட புதிய ஆக்கங்களை தருவித்தல் தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டது.

# பங்குனி மாதத்தின் நினைவுகள்

## புகைப்பட, காணொளி வடிவமைப்பு மற்றும் தொகுப்பு – பயிற்சிப்பட்டறை

தளிர் – 1 திகதி: 26.02.2024, 19.03.2024
தளிர் – 2 திகதி: 16.03.2024, 19.03.2024

வடிவமைப்புகள் தொடர்பான செயலிகள் அவற்றின் செயற்பாடுகள் பற்றி வளவாளர் தனுஷன் அவர்களால் விளக்கப்பட்டதுடன் காணொளிகள், புகைப்படங்களை சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு வடிவமைத்தல் மற்றும் தொகுத்தல் தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டது. தொடர்ந்து 'கப்கட்' செயலியில் மாணவர்கள் செயன்முறைகளை மேற்கொண்டனர்

## அன்றாட வாழ்க்கையில் அரசியல் – கருத்தமர்வு

திகதி: 14.03.2024, 21.03.2024
நேரம்: காலை 09.00 முதல் மதியம் 01.00 மணி வரை

'அரசியல்' எனும் எண்ணருவின் அடிப்படை விளக்கத்துடன் அரசியலின் அன்றாட தாக்கம், அவை ரீதியாக சந்திக்க நேரும் பிரச்சினைகள் குறித்து இளையோர்களால் கலந்துரையாடப்பட்டதுடன் சர்வதேச மற்றும் தேசிய அரசியல் விடயங்கள் முன்வைக்கப்பட்டு, அவற்றின் தாக்கங்கள் மற்றும் அவற்றின் பின்புலங்கள் இளையவரால் பேசப்பட்டது.

## எதிர்கால தகவல் தொழிநுட்பம் – கருத்தமர்வு

திகதி: 25.03.2024
நேரம்: மதியம் 02.00 முதல் மாலை 03.30 மணி

அபார வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் பகுதியான செயற்கை நுண்ணறிவு தொடர்பாக தனுஷன் அவர்களால் தளிர் – 1 குழுவினருக்கு கருத்தமர்வு மேற்கொள்ளப்பட்டது. செயற்கை நுண்ணறிவின் வகைகள் பற்றி பேசப்பட்டதுடன் புழக்கத்திலிருக்கும் செயலிகள் குறித்தும் அலசப்பட்டது.

## டிஜிட்டல் சந்தைப்படுத்தல் – கருத்தமர்வு

திகதி: 26.03.2024
நேரம்: காலை 09.00 முதல் 11.00 மணி வரை

தற்காலத்தில் அதிகரித்துவரும் டிஜிட்டல் சந்தைப்படுத்தலின் செயற்பாடுகள் குறித்து தளிர் இரண்டாம் குழுவினருக்கு வளவாளர் தர்ஷனி அவர்களால் தெளிவுபடுத்தப்பட்டது. வாடிக்கையாளருடனான நம்பிக்கை மற்றும் விளம்பரப்படுத்தல் குறித்தான விளக்கங்களும் இடம்பெற்றன.

# பங்குனி மாதத்தின் நினைவுகள்

## இரத்த தான முகாம்

திகதி: 16.03.2024
நேரம்: காலை 09.00 முதல் மதியம் 01.00 மணி வரை

2019ம் ஆண்டு தொடக்கம் தனக்கென ஒரு இலக்கை கொண்டு செயற்பட்டு வரும் 'தளம்' அமைப்பானது, 2024 இல் தனது ஆறாவது அத்தியாயத்தில், எத்தனையோ தானங்கள் காணப்பட்டாலும், இரத்த தானம் என்பது புனிதமானதாகும் என்ற அடிப்படையில் இரத்த தான முகாம் ஒன்றை நடத்தியது. சுமார் 36 பேர் பிறருக்கு உதவும் பொருட்டு ஆண், பெண் வேறுபாடு இன்றி தம் குருதியினை நன்கொடையளித்திருந்தனர். இதில் பெரும்பாலானோர் இளம் சமூகத்தினர் என்பது கர்வத்துடன் குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

## ஆளுமை விருத்தியுடனான அனுபவப் பகிர்வு

திகதி: 26.03.2024இ 30.03.2024

மத நல்லிணக்கம் தொடர்பாக வளவாளர் அபிநயா அவர்களால் அனுபவப்பகிர்வு மேற்கொள்ளப்பட்டதுடன் இளையோரின் ஆளுமைகளை விருத்தி, மன இளைப்பாறுதல் குறித்தான சுவாரசியமான குழு விளையாட்டுகளும் இடம்பெற்றன.

## தளிர் குழுமத்தினருக்கான ஆங்கில, சிங்கள வகுப்புகள்

திட்டமிட்டதின்படி தளிர் குழுமத்தினருக்கான ஆங்கில இலக்கண, ஆங்கில பேச்சாற்றல் மற்றும் சிங்கள பேச்சாற்றல் வகுப்புகள் இளையோரின் பூரண ஒத்துழைப்புடன் நேரசூசிக்கமைய நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## வளர்ந்தோருக்கான சிங்கள வகுப்பு

தொழில் ரீதியிலும், போட்டிப் பரீட்சைகளின் போதும் ஏற்படக்கூடிய சிங்களம் குறித்தான இன்னல்களை ஈடு செய்வதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட சிங்கள வகுப்பானது இளையோரின் ஒத்துழைப்புடன் திறம்பட இடம்பெற்று வருகிறது.

# சித்திரை மாதத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்வுகள்

இளையோரின் தேன் விருத்தி சார்ந்து ஆறாவது அத்தியாயத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் தளம் அமைப்பினால் பல்வேறுபட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், சித்திரை மாதத்திற்கான திட்டங்களாக தளம் அமைப்பானது பின்வருவனவற்றை ஒழுங்கு செய்துள்ளது.

1. தளிர் 2வது குழுமத்தினருக்கான அமர்வுகள் இம்மாத இறுதி வரை தொடர்சியாக இடம்பெறும்.

2. இளையோர் திறன் சார்ந்து தம்மை சீர் செய்து கொள்ள துணைபுரியும் தளம் அமைப்பினால், " Creating Dancing Studio " எனும் இளையோரின் முயற்சியை நனவாக்கும் பொருட்டு 1 வருட வாடகை ரீதியில் அவர்கள் பயிற்சி வழங்க தேவையான இடத்தை தளம் அலுவலகத்தில் வழங்க ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளது.

3. குறிப்பிட்ட சில விசேட தகைமை கொண்டவர்களை பயிற்சிகளுடன் உள்வாங்கி, பத்து தலைப்புகளில் ஐவர் வீதம் விருத்தி பெறச் செய்து இளம் சமூகத்தினரின் திறன் விருத்தி மற்றும் எதிர்கால நோக்கை அடிப்படையாகக் கொண்டு சித்திரை மாதம் முதல் இச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

- எழுத்தாற்றல் மற்றும் வெளியீடுகள்
- இயற்கை எழுச்சிகள்
- அரசியல் செயற்பாடுகள்
- வரலாறு மற்றும் ஆவணப்படுத்தல்
- கணனி தொழில்நுட்பம் மற்றும் Digital marketing சமூக வலைத்தளங்கள்
- ஊடகத்துறை
- கருத்துருவாக்கிகள்
- தொழில், கல்வி வழிகாட்டிகள் மற்றும் பொருளாதார விருத்தியாளர்கள்
- Presenter மற்றும் Facilitators
- திருக்கோணமலை மற்றும் கலாச்சாரம்

4. நமது பண்பாடு கலாச்சாரம் அழிவடைய கூடாது என்ற நோக்கில் வரும் பௌர்ணமி தினத்தன்று பன்குளத்திலுள்ள எல்லைக்காளி அம்மன் கோவிலுக்கு விஷேட பூஜைகளில் கலந்து கொள்ளும் பொருட்டு தளம் அங்கத்தவர்கள் அங்கு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

5. வார இறுதி நாட்களான சனிக்கிழமை வழமை போல நிகழ்நிலை அமர்வும், ஞாயிற்றுக் கிழமைகளில் அறிவாய்வியல் அமர்வும் இடம்பெற திட்டமிடப்பட்டுள்ளது.

# முகமூடி

உன் முகமூடிக்குள் முகாமிட்டிருக்கிறேன்
உன் முடிவுக்காக

முகத்தின் அழகை மறைக்கும் உன்னால்
அகத்தின் அழகை ஒன்றும் செய்ய முடியாது

எதயும் தாங்கும் இதயம் எனக்கு - உன்
முக அலங்கார முகமூடி களைவாயா என் அழகான
ராட்சசியே

முகமதின் போலியை பூசி பொய்யெனும் பொடியால்
மூடி உலாவரும்
ஒவ்வொருவரும் முகவரியில்லா முகமூடியை

ஓராயிரம் கவிதைகளுக்கு பின்னால் ஓர் அழகிய கற்பனை ஆற்றல் இருப்பது போல ஒவ்வொரு மனிதனும் அணிந்திருக்கும் வெளித்தோற்ற மூகமூடிக்கு பின்னால் ஒரு சிறுகுழந்தைத்தனமான அழகான தோற்றம் காணப்படும்.

# முகமூடி

“

என்னை பார்க்கப்ப் பிடிக்காமல் – நீ முகமூடி போட்டுக்கொண்டாயே
என் உள்ளத்திலிருக்கும் உனக்கு முகமூடி போடா உன்னால் முடியுமா?

”

“

முகத்திற்கு போடும் முகமூடியை – உன்
மனதிற்கு நீ போட்டால் வேதனை உனக்கே

”

“

அரசியல் வாதி அணிய விரும்புவது
அப்பாவி மக்கள் நம்பி ஏமாறுவது

”

“

நிஜ முகம் மறைத்து புதுமுகம் காட்டுகின்றது
முகமூடி – போலியாய்

”

“

முகமூடி அணிந்து கொண்டு உலவும் முகமூடிகளிடமே முகமூடி அணியாத முகத்திரையைத் தேடுகிறேன்

”





# TRINCOMALEE

*City*










# இதழாசிரியர் குழாம் விபரம்



செல்வி ஜிதுஷா அன்டன் ஜூட்
தலைமை ஆசிரியர்



செல்வி ம. டிலானி
உப ஆசிரியர்



செல்வி ச. ஜென்சி
உப ஆசிரியர்



செல்வி மு. அபிநயா
உப ஆசிரியர்



செல்வி ஞா. நிதர்சனா
உப ஆசிரியர்

தளம்
THALAM

**எமது மண்ணுக்காய் தளத்தின் குரல் எப்பொழுதும் ஒலித்துக்கொண்டே இருக்கும்**